REGD. NO. M. 6311 ★ தனி இதழ் 0—1—0 (7 காசுகள்) ★ இலங்கையில் 10 சதம் ★ PHONE: 55630

நம் நாடு

தி.மு.க. தின இதழ் ஆசிரியர் இரா. நெடுஞ்செழியன்

The "Nam Nadu" A Tamil Daily. ★ The Official Organ Of The D.P.F.

மலர் 4] சென்னை: வைகாசி 32உ வெள்ளி (14—6—57) ★ ★ வெளியூர்: ஆனி 1உ சனி (15—6—57) [இதழ் 313

இந்தியில் தேறினுல் ரொக்கப் பரிசு!

இத்திங்கள் முதல் அமுலாகுமாம்

புதுடில்லி, ஜுன் 14—

மத்திய அரசாங்க ஊழியர்களுக்காக அரசாங்கம் நடத்தும் இந்திப் பரீட்சையில் தேறுபவர்களுக்கு ரொக்கப் பரிசுகள் வழங்கும் திட்டத்தை மத்திய அரசாங்கம் இத்திங்களில் அமுல் நடத்தும் என்று தெரியவருகிறது.

ஆடம்பரச் செலவுகள் குறையும் என்ற அறிவிப்பு...!

'மக்களை ஏமாற்றும் மாய்மாலம்'

'புதிய வரிக் கொடுமைகளை மறைக்கச் செய்யும் சூழ்ச்சி'

சென்னைக் கூட்டத்தில் மு. கருணாநிதி முழக்கம்

"அடுத்த சென்னை சட்ட சபைக் கூட்டத்தில் இந்த ஆட்சியாளர்கள் இன்னும் என்னென்ன வரிகளைப் போடப் போகிறார்கள் என்பது தெரியத்தான் போகிறது. டி. டி. கிருஷ்ணமாச்சாரியார் விதித்த அந்த வரிக் கொடுமைகள் போதாதென்று இவர்களும் போடத்தான் போகிறார்கள்.

"அதற்கு முன்னறிவிப்பாகத்தான் என்று கருதுகிறேன்-இரண்டு தினங்களுக்குமுன் பத்திரிகைகளில், 'சென்னை மாநில மந்திரிகள் தங்களின் ஆடம்பரச் செலவுகளைக் குறைத்துக்கொள்ளப் போகிறார்கள்' என்று சய்தி வந்திருக்கிறது. இதற்கு என்ன அர்த்தம்? இதற்குமுன் ஆடம்பரங்களுடன் வாழ்ந்தார்கள் என்றுதானே பொருள்?

"நாம் நாட்டு மக்களிடம் அப்பொழுது சொன்னோம்; மந்திரிகளின் ஆடம்பரங்களைச் சுட்டிக் காட்டி கேட்டோம்; பத்திரிகைகளில் எழுதினோம்; அப்பொழுது இவர்கள் சொன்னார்கள் — 'நாங்கள் ஒன்றும் ஆடம்பரச் செலவுகளை செய்வதில்லை; இந்த அடுக்கு மொழிக்காரர்கள்தான் அவ்வாறு கூறுகிறார்கள்; நாங்கள் செய்வது ஆடம்பரமா?'—என்றெல்லாம் கேட்டார்கள். ஆனால் இப்பொழுது, 'ஆடம்பரங்களைக் குறைத்துக்கொள்ளப் போகிறோம்' என்கிறார்கள்; இதன் பொருள் என்ன?

"ஆனால், இவைகளெல்லாம் வெறும் ஏமாற்று வித்தை; மக்களை ஏமாற்றச் செய்யும் மாய்மாலம்; மக்களுக்கு, போட்டுள்ள வரிகளின்மீதும், போடவிருக்கும் வரிகளின்மீதும் இருக்கும் எண்ணங்களையும், இந்த வரிகளைப் பற்றிய சிந்தனையையும் போக்கச் செய்யும் சூழ்ச்சி; போடவிருக்கும் வரிகளுக்கு இவைகளெல்லாம் அச்சாரம்; முன்னறிவிப்பு!

"வானத்தில் இடி இடிப்பதற்குமுன்னால் மின்னல் ஒளி தோன்றி மறையும். அம்மின்னல் ஒளியை ஒளி விளக்கு என்று கருதிவிடக்கூடாது; அடுத்து இடிக்கும் இடி என்பதை அறிந்துகொள்ளவேண்டும். மின்னலை ஒளிவிளக்கெனக் கருதினால் நிச்சயம் ஏமாந்துதான் போகவேண்டும். அதைப்போல, 'எங்களுடைய ஆடம்பரச் செலவுகளைக் குறைத்துக்கொள்கிறோம்,' என்ற மின்னல்தான் தெரிகிறது; அடுத்து, 'வரி விதிப்புகள்,' என்ற இடி விழத்தான் போகின்றது. இந்த 'மின்னலை'க்கண்டு ஒளி விளக்கென எண்ணுவோர் நிச்சயம் ஏமாறத்தான் வேண்டும்"

—என்று, தோழர் மு. கருணாநிதி அவர்கள் நேற்று சென்னை 4-வது வட்டம் சஞ்சீவிராயன் கோயில் தெருவில் நடைபெற்ற கே. எஸ். பாண்டியன் நினைவு மன்ற துவக்கவிழாப் பொதுக்கூட்டத்தில் பேசுகையில் குறிப்பிட்டார்.

மேலும் அவர் பேசுகையில் குறிப்பிட்டதாவது:—

"இவை மட்டுமல்ல — இனிமேல் ஸ்தல ஸ்தாபனங்களின் வரவேற்பில் கலந்துகொள்ளவும் மாட்டார்களாம்! காரணம் என்ன? ஏன் கலந்துகொள்ள மாட்டார்கள்? இதற்குள்ள உண்மையான காரணம், ஸ்தல ஸ்தாபன வரவேற்பில், அவர்கள் அமைச்சர்களிடம் தங்கள் குறைகளின் பட்டியலோடு வரவேற்பு அளிக்கின்றார்கள். அதற்கு இவர்கள் ஓரளவாவது கவனம் செலுத்த வேண்டியிருக்கிறது; எனவே கலந்துகொள்ளாவிட்டால் குறைகளைத் தெரியாதவர்களாக நடந்துகொள்ள முடியும் என்று எண்ணுகிறார்கள்.

"மற்றும், மக்கள் இவர்களை, 'ஆகா! நமது அமைச்சர்கள் தங்கள் ஆடம்பரங்களைக் குறைத்துக் கொண்டார்களாம்; இனிமேல் அமைச்சர்கள் போலீஸ் பட்டாளம்—பாதுகாப்பு போன்றவைகள் வைத்துக்கொள்ளமாட்டார்களாம்; ஸ்தல ஸ்தாபன வரவேற்புகளில்கூட கலந்துகொள்ள மாட்டார்களாம்; எவ்வளவு சிக்கனம்—எவ்வளவு சிக்கனம்' என்று எண்ணுமாறு செய்யத்தான். ஆனால் இவ்வளவும் மக்களின்மீது வரிகளைப் போட, இவைகளெல்லாம் முன்னெச்சரிக்கைதான்.

"ஆனால், இவ்வளவு வியாக்கியானங்களையும் தேர்தலுக்கு முன் கொடுக்கவில்லையே, ஏன்? டி. டி. கிருஷ்ணமாச்சாரியார் முதல் காங்கிரசிலுள்ள கடைகி ஆள் வரை எந்த யோக்கியராவது இவ்வளவு வியாக்கியானங்களை சொன்னார்களா? இல்லை. தேர்தலில் ஓட்டு கேட்கும்போதெல்லாம், 'வரிகளைக் குறைக்கப் போகிறோம்' என்று சொன்னார்கள்.

"ஆனால் இப்பொழுது, வரிகளைப் போட்டால்தான் நாட்டை ஆள முடியும் என்கிறார்கள்; நாமும் ஒப்புக்கொள்கிறோம். ஆனால், அதற்கும் எப்படி வரிகளைப் போடவேண்டும்—எவ்வளவு வரிகளைப் போட வேண்டும் என்ற வரம்பு கிடையாதா?

"தேனீ தன்னுடைய கூட்டை தேனைக் கொண்டே கட்டுகிறது; தேன், மலரில் இருக்கிறது. தேன் எடுக்கும் வண்டு மலரை கசக்காமல்—குலுக்காமல், மலரின் மகரந்தத் தூள்கள்கூட சிந்தாமல்—சிதையாமல் எடுத்துத் தன்னுடைய கூட்டை கட்டிக்கொள்கிறது. அதைப்போல மக்கள் என்ற மலரிடமிருந்து வரி என்ற தேனை கசக்காமல் எடுத்தல்லவா 'நல்வாழ்வு' என்ற கூடுகட்ட வேண்டும்? ஆனால் இவர்கள், அதற்கு மாறாக கசக்கிப் பிழிந்தல்லவா எடுக்கிறார்கள்?

"இவ்வளவு வரிகளையும், மக்கள் வாழத்தான் போடுகிறோம் என்கிறார்கள்; 'நல்லவர்கள்'தான்; எப்படி? தெருவிலே போகும் ஒருவனைக் கத்தியால் குத்தி குடலையே வெளியே எடுத்த ஒருவனை, போலீஸ்காரர் பார்த்துவிட்டு 'ஏனப்பா குத்தினாய்?' என்று கேட்க, அவன், 'குடலை அவனுக்கு மாலையாகப் போடத்தான் குத்தினேன்;' என்று சொல்லுகிறானே, அந்த 'நல்லவனை'ப் போன்றவர்கள் இவர்கள்!

"ஏழைகளைக் கசக்கிப் பிழிந்து, அவர்களுக்கு நன்மை செய்கிறார்களாம்! ஏன், நீங்கள் வாங்குகிற சம்பளத்தைக் குறைத்துக் கொள்ளக் கூடாதா? கராச்சி காங்கிரசில் தீர்மானமே போட்டிருக்கிறீர்களே, 500 ரூபாய்க்குமேல் சம்பளம் வாங்க கூடாதென்று!

"இப்பொழுது சென்னை அமைச்சர்கள் சம்பளம் என்ற பெயரில் ரூ. 1,500 பெறுகிறார்கள்; ஆனால் இத்தொகை தங்களுக்குப் போதவில்லை என்று கூறுகிறார்கள்.

"இவர்களைப் போன்ற மந்திரிகள் தங்கள் சம்பளத்தையே இப்போது குறைத்துக்கொண்டார்களே! கேரளத்திலே நம்பூதிரிபாத் குறைத்துக்கொண்டாரே! அவருடைய துணை மந்திரிகளும் தங்கள் சம்பளத்தைக் குறைத்துக்கொண்டார்களே! ஆனால் இங்குள்ள சென்னை மந்திரிகளுக்குமட்டும் போதவில்லையாம்! அவர்களைவிட இவர்கள் மூன்று மடங்கு சம்பளம் பெறுவதேன்? இவர்கள்மட்டும் அவர்களைவிட மூன்றுமடங்கு செயல்களை அதிகமாக செய்கிறார்களா? அவர்களைவிட இவர்களுக்குமட்டும் அதிகமாக மூன்று வாயா?

"அதோடு போகிறதா பணம்? இங்குள்ள அமைச்சர்கள் சென்னையைவிட்டு தங்களுடைய சிங்காரக் காரில் சென்றால், சென்னை எல்லையைத் தாண்டியவுடனே ஒரு மைல் தூரம் கார் சென்றால் 9 அணா 'படி' பெறுகிறார்கள்.

"ஆனால் இவர்களைப் பாதுகாக்கும் போலீஸ்காரர்களுக்கு எவ்வளவு கொடுக்கிறார்கள் சம்பளமாக? இவர்களைப் பாதுகாக்க தாங்க முடியாத வெயிலிலும் — மழையிலும், இரவென்றும்—பகலென்றும் பாராது, மிகப் பெரும் இன்னல்களுக்கிடையே பாடுபடும் போலீஸ்காரர்கள் பெறும் சம்பளம் எவ்வளவு? எல்லாமும் சேர்த்துப் பெறுவது நாற்பதோ அல்லது ஐம்பதோ! இவ்வளவு வரிகளைப் போடும் இவர்கள், அவர்களுடைய சம்பளத்தை உயர்த்தவேண்டும் என்று துளியாவது எண்ணுகிறார்களா? சம்பளத்தை உயர்த்துவதற்குத் தயாராக இருக்கிறார்களா என்றால், இல்லை. போலீஸ்காரர்கள் ஒரு கைதியை அழைத்துச் சென்று வந்தால் ஒரு நாளைக்கு கொடுக்கப்படும் 'படி' 12 அணாதான்! மந்திரிகள் பெறும் 'பேட்டா' ஒரு நாளைக்கு ரூ. 250 வரை; சம்பளமாகப் பெறுவது ரூ. 1,500!

"இன்னும், இங்கே கவர்னர் என்ற ஒருவர் இருக்கிறார்; அவருடைய சம்பளம்வருடத்திற்குபத்து இலட்சம் ரூபாய். அவருடைய வேலை சட்ட மன்றத் துவக்கத்திலே துவக்க உரை என்ற பெயரிலே ஒன்றைப் படிப்பது; பிறகு எங்காவது திறப்பு விழாக்கள் இருந்தால் அங்கே போய் திறப்பு விழா செய்வது; இதுதான்! வேறு வேலை என்ன?

"கவர்னர் பதவியென்பதே இவர்கள் ஆட்சியில் தோற்றுப் போனவர்கள் எங்கே மனமொடிந்து போவார்களோ—எங்கே துக்கம் தாங்க முடியாது வேறு நிலைக்குச் சென்றுவிடுவார்களோ என்ற அக்கறையால் அவர்களைப் பாதுகாக்கும் ஓர் பரிசாகத்தான்—துண்டாகத்தான் பயன்படுகிறது. இந்தப் பதவிக்கு

இலட்சக்கணக்கில் ஏன் மக்களின் வரிப் பணம் தரப்படவேண்டும்?

"வரிகளைக் கண்டிப்பது குற்றமாம்; நாம் வரிகளைக் கண்டிப்பது குற்றமென்றால், வரிகளைப் போடும் இவர்கள் எவ்வளவு பெரிய குற்றவாளிகள்? ஐந்து ஆண்டுகளுக்கு நம்மை அசைக்க முடியாது என்ற தைரியத்திலே—மமதையிலே, ஓட்டுப் பெற்றுச் சென்ற மறு விநாடியே வரிகளாகப்போட்டுக் கொடுமைப் படுத்துகிறார்கள் நாட்டு மக்களை! இந்தக் கொடுமைகளைக் கண்டிப்பது குற்றமாகுமாம். இந்தக் கொடுமைகளிலிருந்து மக்கள் விடுபடவேண்டுமா—வேண்டாமா? இவ்வளவு எச்சரிக்கையை நாம் விடுப்பது திராவிட முன்னேற்றக் கழகம் வரிகொடா இயக்கத்தை நடத்தப் போகிறது என்றல்ல; மக்களை அந்த அளவுக்கு—வரி கொடுக்கக்கூடாது என்ற எண்ணத்தை உண்டாக்கும் அளவுக்கு வரிக் கொடுமைகள் ஏற்றப்பட்டுள்ளன.

"மேனாடுகளில் சாதாரண தேயிலை வரிகளாலேயே கவிழ்ந்துவிட்ட அரசுகள் உண்டு; அதே நிலையிலே திராவிடத்தின் விடுதலைக்கு இப்பொழுது போடப்பட்டிருக்கும் வரிகள் வித்தாக அமையும்; ஏழைகள்—பாட்டாளிகள்—குனிந்து கொண்டே இருப்பவர்களையெல்லாம் நிமிரச் செய்யும் என்று எச்சரிக்க விரும்புகிறேன்."

கவர்னர்-ஜெனரலின் சிங்கள வெறி!

பண்டா சர்க்காரைத் தட்டிக் கொடுக்கிறார்

இலங்கை பாராளுமன்றத்திலிருந்து தமிழரசுக் கட்சியினர் வெளிநடப்பு

கொழும்பு, ஜுன் 13—

இலங்கை கவர்னர்-ஜெனரலான சர். ஆலிவர் குணதிலகா, பாராளுமன்றக் கூட்டத்தைத் துவக்கிவைக்கும்போது, சிங்களத்தில் பேசத் துவங்கியதும், வடக்கு, மற்றும் கிழக்கு மாநிலங்களில் வாழும் தமிழர் பிரதிநிதிகளான பெடரல் (தமிழரசு) கட்சி உறுப்பினர்கள் சபையிலிருந்து வெளிநடப்பு செய்திருக்கின்றனர்.

கவர்னர்-ஜெனரல் குணதிலகா, தமிழ் மொழியின் நியாயமான உபயோகம் பற்றி பிரதமர் பண்டாரநாயகாவின் திட்டங்களுக்கு சீக்கிரமே ஒரு உருவான வழி செய்யப்படும் என்றும் தனது உரையில் குறிப்பிட்டாராம்.

தமிழரசுக் கட்சியின் உத்தேச ஆகஸ்டுப் போராட்டம் பற்றிக் குறிப்பிடுகையில் அவர் கூறியதாவது:—

"இந்த நடவடிக்கைகளுக்கு அவசியமே இல்லை. சிறுபான்மையினரின் நியாயமான குறைபாடுகளைப் போக்க எனது சர்க்கார் ஏற்கனவே திட்டங்களை அறிவித்திருக்கிறது. அந்த நிலையில், சிநேகமான பேச்சுவார்த்தைகளின் மூலமாகவே பிரச்சினைகளுக்குப் பரிகாரம் தேடவேண்டும். இதை விட்டு கிளர்ச்சி நடவடிக்கைகளில் ஈடுபட்டால், சட்டத்தையும் ஒழுங்கையும் நிலைநாட்டுவதற்காக சர்க்கார் எல்லா நடவடிக்கைகளையும் மேற்கொள்ளும்" என்றும் மிரட்டினாராம்!

நம் நாடு

சென்னை 14—6—57 வெள்ளி

சமாதானம் காண!

மீண்டும் ஓர் யுத்தம்—அதற்கான அறிகுறிகள் தெரிகின்றன! மின்னல் கண்ணைப் பறிக்கிறது—இடிமுழக்கம் கேட்கிறது—அபாயம் நெருங்குகிறது—என்ற அறிவிப்பு, கொழும்பு சமாதான மாநாட்டிலிருந்து கிடைக்கிறது.

அபாய அறிவிப்பின் நோக்கம், சமாதானம் நிலவச் செய்ய மாநாடு, உருவான வேலைத் திட்டங்களை வெளிக்கொணர வேண்டும் என்பதாகும்.

மாநாட்டில் கூடி அபாய அறிவிப்புகளையும், அரிய யோசனைகளையும் வழங்குவோரின் தூயநோக்கத்தையும், சீரிய பணியையும் சமாதான விரும்பிகள் மனமாரப் பாராட்டவே செய்வர்.

ஆனால் சமாதான மாநாட்டிலிருந்து எழும் அபயக்குரல், சமாதானம் கிடைப்பதற்கு முட்டுக்கட்டையாயிருப்போரின் செவிகளில் நுழைந்தாலும், அவர்களின் ஈவு இரக்கமற்ற இதயங்களைக் கனியச் செய்யத் தவறிவிடுவது உலக மக்களின் கவலையை ஆழப்படுத்தவே செய்கின்றன.

மாநாடுகள் குரல் கொடுக்கின்றன—மனித இனத்தின் கணக்கில்லாத எதிர்கால வளர்ச்சியில் உண்மையான அக்கறை கொண்டவர்கள் கெஞ்சிக் கூத்தாடுகிறார்கள்—'உலகத்தை வாழ விடுங்கள்' என்று!

ஆனால், நிரந்தர சமாதான வாழ்வு என்ற மாளிகையின் முகமண்டபத்தின் கவர்ச்சியும் தெரிகிறது; கடந்த கால யுத்தங்கள் தோற்றுவித்த சாக்காட்டிலிருந்து பிணநாற்றமும் நெடிகுன்றாமல் இன்னமும் வீசிக்கொண்டிருக்கிறது. 'அந்த மாளிகையை அடைவோமா?' என்ற ஏக்கம் ஓர் புறம்—'மீண்டும் ஓர் யுத்தம,' என்ற அபாய அறிவிப்புத் தோற்றுவிக்கும் அச்சம் ஓர் புறம்—இவற்றிற்கிடையில் அலைக்கழிக்கப்படுகின்றன, வாழத் துடிக்கும் மனித நெஞ்சங்கள்!

நினைவு எழவே அச்சமூட்டும் கோர யுத்தம் ஒன்று முடிந்து 12 ஆண்டுகள் ஆகிவிட்டன. அந்த யுத்தம் விளைவித்த அகோரங்களை—பலிகொண்ட உயிர்களை—கொள்ளையிட்ட உடைமைகளை நினைத்துக்கொண்டாலே பிஞ்சு உள்ளங்கள் கிறுகிறுத்துப் போகும். அந்த யுத்தம் தந்த அழிவுகள் இன்னும் பழுது பார்க்கப்படவில்லை; சிதைத்துவிட்ட மனித வாழ்வு இன்னும் சீர்செய்யப்படவில்லை; என்றாலும், இந்த வழிகாட்ட வேண்டிய நிலைகள, நிரந்தர சமாதானத்திற்கு முட்டுக்கட்டையாயிருக்கும வல்லரசுகளை 'இனி யுத்தமே கூடாது' என்ற ஒரு தர்மார்த்தமான முடிவுக்கு வருமாறு தூண்டவில்லை என்றால், அதற்குக் காரணம் என்ன?

போலிப் பெருமையும் எல்லையில்லா சுக போகமும் தரும் **ஆதிக்கம்! ஆதிக்கம்!! ஆதிக்கம்!!!**—என்பதைத் தவிர, வேறென்ன காரணம் இருக்க முடியும்?

இந்த ஆதிக்க ஆசை ஊட்டியுள்ள வெறியின் விளைவுதான் உலகப் பெரும் வல்லரசுகள், 'யுத்தம் வருமோ?' என்ற அச்சத்திலிருந்து விடுபட்டு, 'சமாதானம் நீடிக்கும்' என்ற நம்பிக்கையை உலக மக்கள் பெற முடியாவண்ணம் தடுத்துவரும் தீச்செயலாகும். இந்தச் செயலுக்காக உலகப்பெரும் வல்லரசுகள் வெளிப்படையாக இல்லாவிடினும் அந்தரங்கத்தில் வெட்கப்படத்தான் வேண்டும்.

ஆதிக்க வெறி, இன்று உலகில் உள்ள இரு வேறு முகாம்களையும் பரஸ்பரம் குற்றஞ்சாட்டிக்கொண்டு, தங்கள் தங்கள் பாதுகாப்பிற்கென்று கூறி, மனித சமூகத்தையே பூண்டற்றுப்போகச் செய்யும் 'இராட்சச' அழிவுச் சக்தி கொண்ட அணு—நீர்வாயுக் குண்டுகளைச் செய்து குவிக்கச் செய்வதோடு, அந்த அழிவாற்றலை சிருஷ்டிக்கும் 'கலை'யில் நுணுக்கமும் தேர்ச்சியும் பெறுவதற்காக என்ற விளக்கத்துடன் அந்த ஆயுதங்களை வெடித்து, உலக நிலப்பரப்பெங்கும்—குறிப்பாக ஆசியாவெங்கும் நச்சுத் தூள்களை தூவச் செய்து விளையாடவும் தூண்டுகிறது. தற்கொலைக்கொப்பான இந்த விளையாட்டுகள்—ஒத்திகைகள், அவர்களைப் பெரும் மன உல்லாசத்திலும், மகிழ்ச்சியிலும் இலயித்திருக்கச் செய்யும் அதே நேரத்தில், நச்சுத் தூள்களால் பாதிக்கப்பட்ட மக்கள் புலம்பித் தவிக்கிறார்கள். அவர்கள் எழுப்புகிற ஆவேசமான கண்டனங்களும், கல்லும் கரையும் வேண்டுகோள்களும் தற்கொலை ஒத்திகையில் ஈடுபட்டிருக்கும் வல்லரசுகளின் செவியில் விழ்வதாகவே காணோம். மனிதாபிமானம் அற்றுவிட்டவர்களாகவே அவர்கள் காணப்படுகின்றனர்!

ஒப்புக்காகவேனும், இரு முகாம்களும், தங்கள் தங்கள் நோக்கம் சமாதானத்திற்கு நிரந்தர உயிரூட்டுவதே என்று வேறு பேசுகின்றனர், இந்த இலட்சணத்தில்!

இரு முகாம்களும், அணு ஆயுத சோதனை வெடிப்புகளை நிறுத்துவது, ஆயுதப் பரிகரணம் செய்வது, சமாதானம் காண்பது என்ற நம்பிக்கையூட்டும் விஷயங்களையும் கூடிக் கூடிப் பேசுகின்றனர்; ஆனால் இரு முகாம்களும், அந்தரங்க சுத்தியுடன் அந்தப் பேச்சு வார்த்தைகளில் ஈடுபடுவதாக நம்புவதற்கில்லை.

கம்யூனிஸ்டு பூச்சாண்டி காட்டுகிற அமெரிக்கா முதலிய வல்லரசுகளுக்கோ, ஏகாதிபத்தியக் கொடுமைகள் பற்றிப் பேசுகிற ரஷ்யாவுக்கோ, ஒருவர்மீது மற்றவர் குற்றஞ்சாட்டிக் கொள்ள பரஸ்பரம் இடம் கொடுத்துவிட்டிருக்கின்ற காரணத்தால், இருமுகாமினருக்கும் மற்றவரைக் கண்டிக்க சுய ஒழுக்கரீதியான திராம் இல்லை.

எகிப்துமீது படையெடுப்பையும், அல்ஜீரியாவில் நடைபெறும் மனிதவேட்டையையும், மத்தியக் கிழக்கில் அமெரிக்கா வீசியிருக்கிற கழுகு நோக்கையும் ரஷ்யா கண்டிக்க முன்வரும்போது, ரஷ்யாவைக் கண்டிக்க ஒரு 'ஹங்கேரி'யும் நிகழ்ந்து விடுகிறது.

இந்த நிலையில் சிக்கிக் கொண்டு உலகம் தேம்பியழுகிறது; 'சமாதான வாழ்வு என்ற மாளிகையை அடைவோமா?' என்று ஏங்கித் தவிக்கிறது!

ஆனாலும், நிகழ்காலச் சூழ்நிலைகள், நம்பிக்கையையும் அவநம்பிக்கையையும் ஒருசேரத் கருவதாயிருப்பினும், ஆதிக்கப் போட்டியில் ஈடுபட்டுள்ள வல்லரசுகள், குறுகிய எதிர்காலத்திலேனும் தங்கள் போக்கு முற்றிலும் புதியதோர் திசை மாற்றம் பெறவேண்டியது என்பதை உணராமற் போகமாட்டா என்றே நாம் நம்பலாம்.

அந்த உணர்வை உலகெங்கிலுமுள்ள விடுதலைவிரும்பிகள்—சமாதானப் பிரியர்கள் தான் வல்லரசுகளுக்கு ஊட்ட முடியுமே தவிர, தங்களுக்கு அடிமைப்பட்டவர்கள் சிலர் இருக்கத்தான்வேண்டும் என்று விரும்பும் ஆதிக்கபுரியினராலும் அவர்களுக்குத் துதிபாடுபவர்களாலும் ஊட்டமுடியாது.

உலக சமாதானம் தழைக்கவும், நிலைக்கவும் பூர்வாங்கமான நிலைகள் ஏற்பட்டாக வேண்டும்; அதுதான், உலகில் எந்த மூலையிலும் வாழும் சின்னஞ் சிறு மக்கள் கூட்டமும் தான் விரும்பும்வகையான விடுதலையைப் பெற்று மகிழும் நிலை! அந்த நிலை தோன்ற வழி செய்வதே, சமாதானத்திற்காகப் பாடுபடக்கூடியவர்கள் மேற்கொள்ளவேண்டிய நீண்டகாலத் திட்டமாக இருக்கமுடியும் என்பதை நாம் சொல்லத் தேவை இல்லை. நிரந்தரமான சமாதான வாழ்வை உலகம் பெற இன்னும் எத்தனையோ தூரம் நடந்தாகவேண்டியிருக்கும் என்று இந்த நேரத்தில் நாம் கூறுவது அவநம்பிக்கையான சிந்தனையின் முடிவு அல்ல!

ஏழு மணி நேர வேலைத் திட்டம்

உலக தொழிலாளர் மாநாட்டில் ரஷ்யா அறிவிப்பு

ஜெனீவா, ஜுன் 11—

எல்லாத் தொழிலாளர்களுக்கு 7 மணி நேர வேலையும், சுரங்கத்தில் வேலை செய்பவர்களுக்கு 6 மணி நேர வேலையும் நிர்ணயிக்க ரஷ்யா திட்டமிட்டுவருவதாகவும், 1960-ல் அந்தத் திட்டம் அமுல் செய்யப்படலாம் என்றும் உலக தொழிலாளர் மாநாட்டில் ரஷ்யப் பிரதிநிதி தெரிவித்துள்ளார்.

சொத்துக்கள் பற்றி பரிசீலனை

ஜாகர்த்தா, ஜுன் 12—

தனிப்பட்டோருடையவும், இராணுவத்தினருடையவும், இராணுவ நிர்வாகிகளினுடையவும் சொத்துக்களைப் பரிசோதனை செய்ய பிரதம இராணுவத் தளபதி குழு ஒன்றை நிறுவியுள்ளார்; இந்தக் குழு, முதலில் அவருடைய சொத்துக்களையே பரிசிலனை செய்யுமாம்.

இலஞ்ச ஊழலை தடுக்கவும், ஒழிக்கவும் இந்த முடிவு மேற்கொள்ளப்பட்டிருக்கிறது.

எந்த இராணுவத்தினரும் அவர்களுடைய சொத்துக்களின் பூர்வீகம் பற்றியும், வருமான வழிவகைகள் குறித்தும், அக்குழுவிடம் சாட்சியம் கூறுமாறு கோரப்படலாம்.

வடவருக்குப் போதுமான கோதுமை கிடைக்க விரைகிறது டில்லி!

நான்கு கோதுமை மண்டலங்களாக நாடு பிரிக்கப்படுகிறது

தென் மண்டலங்கள் அமைப்பது பற்றி ஆலோசித்துக்கொண்டிருக்கிறார்களாம்!

புதுடில்லி, ஜுன் 12—

தென்னவர்களின் முக்கிய உணவுப் பொருளான அரிசி சம்பந்தமாக மண்டலங்கள் ஏற்படுத்தும் விஷயத்தில் மத்திய அரசாங்கம் அக்கறை எடுத்துக்கொள்ளவில்லை. ஆனால், கோதுமையை அதிகமாக உபயோகிக்கும் வடவரின் விஷயமாக மத்திய அரசாங்கம் முழு அளவில் அக்கறை எடுத்துக்கொண்டுள்ளது.

வடவர்களுக்கு நியாயமான விலையில், தேவையான அளவுக்குக் கோதுமை கிடைப்பதற்கும், விநியோகத்திற்குச் சுலபமாகவும் இருக்கும் பொருட்டு, நாட்டை நான்கு கோதுமை மண்டலங்களாகப் பிரிப்பதற்கு இந்திய சர்க்கார் முடிவு செய்திருக்கிறது.

ஒரு மண்டலத்திற்குள் கோதுமை, கோதுமைப் பண்டங்கள் நடமாட்டத்திற்கு எவ்விதக் கட்டுப்பாடும் இருக்காது; ஆனால் அவைகள், ஒரு மண்டலத்திலிருந்து மற்றொரு மண்டலத்திற்குச் செல்வதற்கும் வருவதற்கும் கட்டுப்பாடுகள் உண்டாம்.

உபரியாகவும், பற்றாக்குறையாகவும் உள்ள இந்த மண்டலங்களாவன:—1. பஞ்சாப், இமாசலப் பிரதேசம்; 2. உத்தரப் பிரதேசம்; 3. பீகார்; 4. இராஜஸ்தான், மத்தியப் பிரதேசம், பம்பாய் நகரம் உட்பட பம்பாய்.

உபரி பகுதிகள், பற்றாக்குறைப் பகுதிகளின் தேவையைப் பூர்த்தி செய்யும்.

ஆலோசிக்கின்றனராம்!

அரிசியைப் பயன்படுத்தும் பிரதேசங்களை மண்டலங்களாகப் பிரிப்பது பற்றி அரசாங்கம் ஆலோசனை செய்துவருகிறதாம்.

ஆந்திரம், சென்னை, மைசூர் ஆகிய மாநிலங்கள் அடங்கிய மண்டலத்தை ஏற்படுத்த வேண்டுமென சென்னை சர்க்கார் மத்திய சர்க்காரைக் கோரியிருக்கிறது.

கேரளத்தின் உணவுப் பொருள் தேவைகளை மத்திய அரசாங்கம் பூர்த்தி செய்ய வேண்டுமென்றும் கருத்தறிவிக்கப்பட்டிருக்கிறது.

'பிரச்னைகளை அணுகும் முறை தவறானதாகும்'

தென் ஆப்பிரிக்கத் தலைவர்கள் போக்குக்குக் கண்டனம்

ஜோகன்ஸ்பர்க், ஜுன் 12—

"அமெரிக்க முதலீட்டிற்கு நல்ல வாய்ப்புகள் மட்டும் இருந்தால் போதாது; அதற்குத் தகுந்த பாதுகாப்பு இருக்கிறதா என்ற நிலைமையையும் அமெரிக்கா கவனிக்கும். அரசியல்ரீதியில் தென்னாப்பிரிக்கா அவ்வளவு பாதுகாப்புள்ள நாடாக இருப்பதாக அமெரிக்கா கருதவில்லை.

"தென்னாப்பிரிக்க தேசியத் தலைவர்கள் பிரச்சினைகளை அணுகும் முறை தவறானதாக உள்ளது; இவர்கள் செலலும் வழியும் சரியானதாகாது," என்று, தொழில் சம்பந்தமாக இங்கு வந்துள்ள ஸ்டீவன்சன் கூறியுள்ளார்.

பழைய பிரதமர் பாதையில் புதியவர்!

அல்ஜீரியாவின் கதி என்ன?

பாரிஸ், ஜுன் 12—

சமீபத்தில் பதவியிலிருந்து விலகிய மோலே அரசாங்கம் கோரிய தொகைக்குத் தாமும் புது வரிகள் விதிக்கப்போவதாக பிரான்சின் புதிய பிரதமர் மானூரி தெரிவித்துள்ளார்.

பிரான்சிடமிருந்து தன்னைப் பிரித்துக்கொள்ள முடியாதவகையில் அல்ஜீரியாவுக்கு ஒரு புதிய அரசியல் அமைப்பை அவர் உருவாக்கப் போகிறாராம்!

"சண்டை நம்மீது திணிக்கப்படுகிறவரை நாமும் தொடர்ந்து போராடவேண்டியதுதான்" என்றும் அவர், தன்னுடைய பிடிவாதப் பிற்போக்குக் கொள்கைக்கு ஆதாரம் தேடிக்கொண்டுள்ளார்.

6,000 பேருக்கு மேல் பாதிக்கப்படமாட்டார்களாம்!

புதுடில்லி, ஜுன் 12—

ஆண்டுதோறும் ரூ. 24,000-க்குக் குறைவாகச் செலவு செய்பவர்களை செலவு வரி பாதிக்காது என்றும், தற்போது திட்டமிட்டுள்ளபடி செலவுமீது வரி விதிப்பதன் மூலம் மொத்தம் 6,000 பேர்கள்தான் பாதிக்கப்படுவார்கள் என்றும் அரசாங்கக் குறிப்பு கூறுகிறது.

★

உணவு பிரச்சினையில் குழப்பத்தைத் தவிர்க்க முயற்சி!

இந்திய சர்க்கார் தீவிரம்

புதுடில்லி, ஜுன் 12—

இந்தியாவில் தற்போது உணவு விநியோகத்திலுள்ள தடுமாற்றத்தைத் தவிர்க்கவும், தேவையான உணவுத் தானியங்கள் கிடைக்கச் செய்யவும், மத்திய அரசாங்கம் அக்கறை எடுத்துக்கொண்டுள்ளதாம்!

இதற்காகச் சில உடனடியான கட்டுப்பாடு ஏற்பாடுகள் செய்ய மத்திய அரசாங்கம் முடிவு செய்துள்ளதாம்.

இந்த முடிவுகளின்படி மாநிலங்களை இணைத்து உணவு மண்டலங்களாகப் பிரிக்கவும், உணவுத் தானியங்களின் விலையை நியாயமான அளவுக்கு நிர்ணயிப்பதன் மூலம் விவசாயிகளுக்கு உத்திரவாதம் தரவும் திட்டமிடப்பட்டுள்ளதாம்.

வெளிநாடுகளிலிருந்து இறக்குமதி செய்யப்படும் உணவு தானியங்களைக்கொண்டு சில மாநிலங்களில் ஏற்பட்டுள்ள உணவு நெருக்கடியை சமாளிக்க மத்திய அரசாங்கம் திட்டமிட்டுள்ளது என்று தெரியவருகிறது.

ஆரம்ப ஆசிரியர்களுக்கு ஊதிய உயர்வு!

கேரள சர்க்கார் உத்தரவு

திருவனந்தபுரம், ஜுன் 12—

கேரள மாநிலத்தில் ஆரம்ப ஆசிரியர்களின் ஊதியத்தை மாற்றி அமைக்குமாறு அரசாங்கம் உத்தரவு பிறப்பித்துள்ளது.

இந்த உத்தரவு சர்க்கார் பள்ளிகள், மாவட்டக் கழகங்கள், நகரசபை, தனிப்பட்டோர் நிர்வாகத்திலுள்ள பள்ளிகள் ஆகியவைகளுக்கும் பொருந்தும்.

இவ்வுத்தரவின்கீழ் ஆரம்ப ஆசிரியர்கள் மாதம் ரூ. 40-லிருந்து ரூ. 120 வரை ஊதியம் பெறுவர்.

திரு-கொச்சி பகுதியில் பயிற்சி பெற்ற ஆசிரியர்கள் ரூ. 35 முதல் 80 வரை ஊதியம் பெறுவர்.

புதிய ஊதிய உயர்வு விகிதங்கள் 1—4—57 முதல் அமுலுக்கு வரும்.

புது வரிகளுக்கு எதிராகக் கண்டனம்

நாடெங்கும் மக்கள் குரலெழுப்பினர்

★

சென்னை 33-வதுவட்டம்

27—5—57-ல், தி. மு. கழகச் சார்பில் புதுவரிகள் கண்டனக் கூட்டம் நடைபெற்றது; தோழர்கள் எம். ஏ. பழனி, தா. கு. இளமாறன், மன்னர் மன்னன், மற்றும் பல தோழர்கள் வரி விதிப்பைக் கண்டித்துப் பேசிய பின் கண்டனத் தீர்மானம் நிறைவேற்றப்பட்டது.

சென்னை 44-வதுவட்டம்

26—5—57 மாலை புது வரி கண்டன ஊர்வலம் ஒன்று, மயிலை ஆமில்டன் வாராவதி பஸ் நிலையத்திலிருந்து தோழர் பி. இராமசாமி தலைமையில் புறப்பட்டு, பஜார் ரோடு, கச்சேரி ரோடு, லஸ், இராயப்பேட்டை ஐரோடு, வீரப்பெருமாள்கோயில் தெரு, அப்பர்சாமிகோயில் தெரு, முண்டக்கண்ணிஅம்மன்கோயில் தெரு வழியாகச் சென்று இராம கிருஷ்ணபுரம், 'உதயசூரியன்' படிப்பகத்தின் அருகில் முடிவுற்று, அங்கு நடைபெற்ற கூட்டத்தில் கண்டனத் தீர்மானம் நிறைவேற்றப்பட்டது. ஊர்வலத்தில், 44-வது வட்டத்தின் துணை அமைப்புகளான கே. வி. கே. சாமி படிப்பகம், 'உதயசூரியன்' படிப்பகம், அப்துல் மஜீத் படிப்பகம், சவுந்தரபாண்டியனுர் படிப்பகம் ஆகியவை கலந்து சிறப்பித்தன.

சென்னை 46-வதுவட்டம்

26—5—57-ல், தி. மு. கழகச் சார்பில் நடைபெற்ற வரி விதிப்பு கண்டனக் கூட்டத்தில் கண்டனம் தெரிவிக்கப்பட்டு, தீர்மானம் நிறைவேற்றப்பட்டது. மேற்படி வரி விதிப்புக் கண்டனக் கூட்டம் கழகப் பணிமனையில் 9-30 மணி அளவில் சா. சுந்தரம் தலைமையில் நடைபெற்றது. நடிகமணி டி. வி. நாராயணசாமி பேசினுர்.

சென்னை-அமைந்தகரை

1—6—57ல், பகுத்தறிவுப் படிப்பகத்தின் பொது உறுப்பினர்கள் கூட்டம் நடைபெற்றது; அதுபோது, புதிய வரிகளைக் கண்டித்துத் தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டன.

வலசக்காடு:

26—5—57 மாலை 5 மணிக்கு, வலசக்காடு தி. மு. கழகச் செயலாளர் தலைமையில் புதுவரிகள் கண்டன ஊர்வலமும் - கூட்டமும் நடைபெற்றது. ஊர்வலத்தில் அண்ணு - பொதுச்செயலாளர் இரா. நெடுஞ்செழியன் ஆகியோரது உருவப் படங்களைக் கொண்டு செல்லப்பட்டதோடு, கண்டனக் கூட்டத்தில் ஏராளமான பொதுமக்கள் கலந்து கொண்டனர்.

சத்திரப்பட்டி:

29—5—57ல், இவ்வூரில் புது வரிகள் கண்டனப் பொதுக்கூட்டமும் - மே தின விழாவும் தோழர் இராமச்சந்திரன் தலைமையில் நடைபெற்றது. தோழர்கள் புரட்சிமணி, தமிழ் செல்வம், நெல்லை - மணிமொழியன் ஆகியோர் பேசியபின், சில தீர்மானங்களும் நிறைவேற்றப்பட்டன.

காட்டூர்:

26—5—57 மாலை 4 மணிக்கு, தோழர் தா. சொக்கலிங்கம் தலைமையில், தி. மு. கழக உறுப்பினர்களும், கழக ஆதாவாளர்களும், புது வரி விதிப்புக் கண்டன ஊர்வலம் நடத்தினர். ஷை ஊர்வலம் கழக கட்டிடத்திலிருந்து புறப்பட்டு இவ்வூரின் 10-வீதிகளிலும் சென்று மீண்டும் கழகக் கட்டிடத்திற்கு வந்து முடிவுற்றது. மாலை 6 மணிக்குத் தோழர் கா. தருமலிங்கம் தலைமையில் கண்டனக் கூட்டம் நடைபெற்றது; தோழர்கள் கா. ப. கணபதி, த. சொக்கலிங்கம் முதலியோர் புது வரிகளைக் கண்டித்துப் பேசினர்.

மேவானி:

28—5—57ல், தி. மு. கழகச் சார்பில் நடைபெற்ற புது வரிகள் கண்டனப் பொதுக்கூட்டத்தில் புதுவரிகளைக் கண்டித்து ஒரு தீர்மானம் நிறைவேற்றப்பட்டது.

அண்ணங்காரம்பேட்டை:

26—5—57ல், அண்ணங்காரம்பேட்டை - கீழக்குடிகாடு, தி. மு. கழகங்களின் ஆதரவில் புதுவரிகள் கண்டன ஊர்வலமொன்று புறப்பட்டு, கோ. கருப்பூர், உதயநத்தம் முதலிய ஊர்களின் வழியாகப் புது வரிகள் கண்டனக் குரல்களை எழுப்பிக் கொண்டு வந்தது; இரவு 8 மணிக்கு அண்ணங்காரம்பேட்டையில் தோழர் இராசமாணிக்கம் தலைமையில் ஓர் பொதுக்கூட்டம் நடைபெற்றது; புது வரிகளை எதிர்த்து தோழர் சா. இராமலிங்கம், மற்றும் பலர் பேசினுர்கள்.

கீழ்ப்பாண்டவர்மங்கலம்:

26—5—57 மாலை 6½ மணிக்கு தோழர் தோ. ஆபிரகாம் தலைமையில் புதிய வரியைக் கண்டிக்து பெரியார் இருளாண்டி இல்லத்திலிருந்து ஊர்வலம் புறப்பட்டு, முக்கிய தெருக்களின் வழியாகச் சுற்றிவந்து, குடிதண்ணீர் கிணறு பக்கத்தில் முடிவுற்றது. அங்கு தோழியர் சத்தியவாணிமுத்து எம். எல். ஏ; அவர்களால் கொடி யேற்றி வைக்கப்பட்டது.

பின்னர், தோழர் ம. பொன்னுச்சாமி அவர்கள் திடலில் தோழர் இரா.சி.ப. இருளாண்டி தலைமையில் பொதுக் கூட்டம் நடைபெற்றது. தோழர்கள் ம. செல்லத்துரை, செல்லையா, அருணுசலம், ஆகியோர் பேசிய பின், தோழியர் சத்தியவாணி முத்து எம். எல். ஏ. அவர்கள் விரிவுரையாற்றினுர்.

விளாப்பாக்கம்:

26-5-57 மாலை 5-30 மணிக்கு, தோழர் நாகநாதன் அவர்கள் தலைமையில் புது வரிகள் கண்டன ஊர்வலம் நடத்தி, புதிய வரிகளைக் கண்டித்துத் தீர்மானம் நிறைவேற்றப்பட்டது.

சிருவை நண்டம்:

26—5—57ல், தி. மு. க. சார்பில், தோழர் கா. நயினுர் தலைமையில் புது வரிகள் கண்டன நாள் ஊர்வலம் நடைபெற்றது. அதில் கொங்காராயகுரிச்சி, ஆழ்வார் சற்குளம், தோழப் பண்ணை, திருப்புளியன்குடி, பேரூர் ஆகிய கிளைக் கழகத் தோழர்கள் கலந்துகொண்டனர்;

பின், தோழர் சி. செல்லச்சாமி தலைமையில் புதுவரிகள் கண்டன நாள் பொதுக்கூட்டம் நடைபெற்றது. புது வரிகளைக் கண்டித்து, தோழர்கள் கோவில் பிள்ளை, தாயப்பன், வேல் பாண்டி, கா. நயினுர், அண்ணுமலை ஆகியோர் பேசினர். தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டன.

மேட்டுப்பாளையம்:

31—5—57ல், மேட்டுப்பாளையம் தி. மு. கழக செயற்குழுவில் புதிய வரிகளைக் கண்டித்து தீர்மானம் நிறைவேற்றப்பட்டது.

திருப்புத்தூர்:

27—5—57-ல் திருப்புத்தூர் (இ. மா.) நகர தி. மு. க. சார்பில் புது வரி கண்டனக் கூட்டமும் ஊர்வலமும் நடத்தப்பட்டன. கருணுநிதி படிப்பகத்திலிருந்து கண்டன ஊர்வலம் புறப்பட்டு நகரின் முக்கிய வீதிகள் வழியாக வந்து 'ஆசாத் பார்க்' சேர்ந்தது. ஊர்வலத்தில் புதுப்பட்டி, திருக்களாப்பட்டி தோழர்கள் பங்கேற்றுக் கொண்டார்கள். மாலை 6-30 மணிக்கு 'தியாக' சொ. பரமசிவம் அவர்கள் தலைமையில் தோழர்கள் எஸ். எஸ். தென்னரசு, உ. பில்லப்பன், அ. குருசாமி ஆகியோர் புதுவரிகளைக் கண்டித்துப் பேசினர்.

தா. பேட்டை—பிள்ளாதுரை:

26—5—57-ல், புதுவரி கண்டன ஊர்வலம் சந்தை மைதானத்திலிருந்து புறப்பட்டு முக்கிய தெருக்களின் வழியாக வந்து சந்தை மைதானத்தை அடைந்தது.

முதுகுளத்தூர்:

6—6—57-ல், தி. மு. கழகச் சார்பில் தோழர் வே. தங்கப்பாண்டியன் தலைமையில் வரி எதிர்ப்பு நாள் நடைபெற்றது மாலை 6 மணிக்கு மாபெரும் கண்டன ஊர்வலம் தோழர் எம். கிருஷ்ணன் தலைமையில் நடைபெற்றது. தோழர்கள் மதுரை எஸ். முத்து, கே. எஸ். சந்தானம் ஆகியோர் பேசினர்.

பழையவத்தலகுண்டு:

26—5—57-ல், தி. மு. கழகச் சார்பில் புதிய வரிகளை எதிர்த்து தோழர் நா. பிச்சைமணி தலைமையில் ஓர் கண்டன ஊர்வலம் நடைபெற்றது.

குந்தை:

26-5-57 பிற்பகல் 2 மணிக்கு மஞ்சூர் அரபின்ளு மைதானத்தில், புது வரிகள் கண்டன பொதுக்கூட்டம் தோழர் தருமராசன் தலைமையில் நடைபெற்றது. தோழர்கள் கோவை-செழியன், குந்தைபேப்பன், கு. பீமன், எழிலன் ஆகியோர் பேசிய பின், புது வரிகளைக் கண்டித்து தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டன.

கழிஞ்சூர்:

26—5—57 காலை 9 மணிக்கு தோழர் மு. கோதண்டன் அவர்கள் தலைமையில் புது வரிகள் கண்டன ஊர்வலம் புறப்பட்டு ஊரின் முக்கிய தெருக்கள் வழியாக சென்றது.

தண்டரை:

26—5—57 மாலை 4 மணிக்கு கழகக் கட்டிடத்திலிருந்து புது வரிகள் கண்டன ஊர்வலம் புறப்பட்டு முக்கிய வீதிகளின் வழியாக வந்து, மாலை 6 மணிக்கு தோழர் த. து. சண்முகம் தலைமையில் நடைபெற்ற கண்டனப் பொதுக் கூட்டத்தில் கலந்துகொண்டது. கூட்டத்தில் தோழர் பாபு மற்றும் பலர் பேசியபின், புது வரிகளைக் கண்டித்து ஒரு தீர்மானமும் நிறைவேற்றப்பட்டது.

திருவள்ளூர்:

26—5—57 மாலை தி. மு. கழகத்தின் சார்பில் புது வரி கண்டன ஊர்வலம் தோழர் எச். ஏ. சமியுல்லா தலைமையிலும், பொதுக்கூட்டம் தோழர் பி. இளமாறன் தலைமையிலும் நடைபெற்றது. கூட்டத்தில் தோழர்கள் கே. ஆர். சொக்கலிங்கம், எச். ஏ. கனி, எம். கே. ஜி. சாமி, டி. எத்திராசன் ஆகியோர் பேசிய பின், புது வரிகளைக் கண்டித்து தீர்மானங்களும், மற்றும் சில தீர்மானங்களும் நிறைவேற்றப்பட்டன.

தேவதானப்பட்டி:

4—6—57ல், இவ்வூர் தி. மு. கழகச் சார்பில் புது வரிகள் கண்டனக் கூட்டம் தோழர் வி. வி. குருசாமி தலைமையில் நடைபெற்றது; தோழர் கே. எஸ். சந்தானம் புதிய வரிகளைக் கண்டித்துப் பேசினுர். தோழர் கனகராஜ் இயக்கப்பாடல்கள் பாடினுர்.

சிவகாசி-அம்மன்கோவில்பட்டி:

2—6—57ல், கண்டன ஊர்வலமும், பொதுக்கூட்டமும் நடைபெற்றது; ஊர்வலம் வரிகளைக் கண்டிக்கும் ஒலி முழக்கங்கள் எழுப்பியவண்ணம் முக்கிய வீதிகள் வழியாக கூட்டத்திடலை அடைந்தது. இரவு 7-30 மணிக்கு தோழர் நா. கா. குருசாமி தலைமையில் கூட்டம் நடைபெற்றது; தோழர்கள் கே. ஆர். பி. மணிமொழியன், வே. கருணுகரன் ஆகியோர் பேசியபின், வரிகளைக் கண்டித்துத் தீர்மானங்களும் நிறைவேற்றப்பட்டன.

அக்கப்பன்நாயக்கன்பாளையம்:

26—5—57 மாலை பழனியை அடுத்த அக்கப்பநாயக்கன் பாளையத்தில், கலையம்புத்தூர் தோழர்களால் கொடியேற்றுவிழா நடத்தி வைக்கப்பட்டது. தோழர் எஸ் எஸ். தென்னரசு கொடியேற்றி வைத்துப் பேசினுர்.

பழனி— கலையம்புத்தூர்:

26—5—57 மாலை பழனி—கலையம்புத்தூரில் புதுவரிக் கண்டனக் கூட்டம் நடைபெற்றது. ராசரத்தினு ஆலைத் தொழிலாளர்களும், விசயகுமார் ஆலைத்தொழிலாளர்களும், கழகத் தோழர்களும் மிகப் பெரிய கண்டன ஊர்வலத்தை நடத்தினர்.

மாலை 6-மணிக்கு தோழர் ஷெரீப் தலைமையில் மாபெரும் கண்டனக் கூட்டம் நடைபெற்றது. தோழர்கள் எஸ்.எஸ். தென்னரசு, ஆயக்குடி ப. சண்முகம், மெய்யன்பன் ஆகியோர் பேசினர்.

இறுதியில் சின்னுளப்பட்டி மெய்யன்பன் குழுவினரால் வில்லுப்பாட்டு நடத்திக் காட்டப்பட்டது.

கோவண்டகுறிச்சி:

26—5—57ல், லால்குடி வட்டம்-கோவண்டகுறிச்சி கிராமத்தில் புதுவரிகள் கண்டன ஊர்வலம் தோழர் ஆ. சின்னையா தலைமையில் கழக அலுவலகத்திலிருந்து புறப்பட்டது. ஊர்வலத்தில் கழகத் தோழர்களும் ஆதரவாளர்களும் கலந்துகொண்டு தங்களின் எதிர்ப்பை தெரிவித்தனர். மாலை 6 மணிக்கு தோழர் ஆ. சின்னையா அவர்கள் தலைமையில் நடைபெற்ற பொதுக் கூட்டத்தில் தோழர்கள் ஆ. துரைராசன், ஆரோக்கியம், இன்னேசேசு, டி. சந்தியாகு ஆகியவர்கள் புதுவரிகளைக் கண்டித்துப் பேசினர்.

நடுப்பட்டி:

26—5—57ல், நடுப்பட்டியில் புதிய வரிவிதிப்பைக் கண்டித்து ஓர் கண்டன ஊர்வலமும், வள்ளுவர் திடலில் தோழர் க. முத்து தலைமையில் பொதுக் கூட்டமும் நடைபெற்றது. தோழர்கள் முருகேசன், நாராயணசாமி, தனிக்கோடி, இளஞ்செல்வன் ஆகியோர் பேசியபின், செயலாளர் கே. வி. கே. சாமி நன்றி நவில கூட்டம் முடிவுற்றது.

வடுகர்பேட்டை:

26—5—57ல், லால்குடி வட்டம் வடுகர்பேட்டை கிராமத்தில் தோழர் இ. அந்தோணி தலைமையில் புதுவரிகள் கண்டன ஊர்வலம் நடைபெற்றது; ஊர்வலத்தில் பொதுமக்கள் ஏராளமாக கலந்துகொண்டனர். பின் நடந்த செயற்குழுக் கூட்டத்தில் புதுவரிகளை அரசாங்கம் கைவிடுமாறு கேட்டுக்கொண்டு ஒரு தீர்மானம் நிறைவேற்றப்பட்டது.

நெல்லை சந்திப்பு:

2—6—57 மாலை 6 மணிக்கு நெல்லை சந்திப்பு ஆற்று மணலில் புதிய வரிகள் கண்டனக் கூட்டம் தோழர் பி. பத்மநாபன் தலைமையில் நடைபெற்றது. தோழர்கள் டபிள்யூ. டி. துரைசாமி, எம். ஆர். ஜனுர்த்தனம், வீ. முருகு ஆகியோர் புதிய வரிகளைக் கண்டித்துப் பேசினர். கூட்டம் தச்சநல்லூர் தி. மு. கழகம், உடையார்பட்டி அழகிரி நினைவு மன்றம், சிந்துபூந்துறை கே. வி. கே. சாமி நினைவு மன்றம் ஆகியவைகளின் சார்பில் நடைபெற்றது.

தொ. சேடர்பாளையம்:

இவ்வூர் தி. மு. கழகத்தின் சார்பில் நடைபெற்ற பொதுக் கூட்டத்தில் புது வரிகளைக் கண்டித்து தீர்மானமொன்று நிறைவேற்றப்பட்டது.

டெல்லி வழங்கும் உதவி போதுமானதல்ல!

அதிகச் செலவு முழுவதையும் தர வேண்டும்

ஆரம்ப ஆசிரியர் சம்பள உயர்வுபற்றி ஆந்திர சர்க்கார்

ஐதராபாத், ஜூன் 12—

"ஆரம்பப்பள்ளி ஆசிரியர்களின் குறைந்தபட்ச சம்பள விகிதங்களை மத்திய சர்க்கார் சிபாரிசு செய்துள்ள அளவுக்கு உயர்த்த வேண்டுமானுல், ஆகக்கூடிய அதிகச் செலவு முழுவதையும் டெல்லி சர்க்கார்தான் ஏற்றுக்கொள்ள வேண்டும்; அப்போதுதான் அது சாத்தியம்"

—என்று ஆந்திர சர்க்கார் டெல்லியிடம் முறையிட்டிருப்பதாக சர்க்கார் அதிகாரி ஒருவர் தெரிவித்திருக்கிறுர்.

மத்திய சர்க்காரோ, தங்கள் சிபாரிசுப்படி அமுல் செய்யப்படும் சம்பள விகித அளவுக்கு மாநிலங்கள் ஆரம்ப ஆசிரியர் அதிகப்படி ஆகக்கூடிய செலவில் பாதியைமட்டும் தருவதாகக் கூறியிருக்கின்றனர்.

ஆந்திரசர்க்கார், டில்லி உதவக்கூடிய பாதி உதவிக்கும் அப்பால் இந்தவகைக்கு ரூ. 80 இலட்சம் வரை செலவு செய்ய நேரிடும்; ஆனுல் இது சாத்தியமில்லை; காரணம், ஏற்கனவேயே மாநில சர்க்காருக்கு ரூ. 10 கோடி வரை பற்ருக்குறை இருந்துவருகிறது;

எனவே, முழுத் தொகையையும் டில்லிதான் உதவ வேண்டும் என்று கேட்டிருப்பதாயும் பத்திரிகையாளரிடம் அந்த அதிகாரி தெரிவித்திருக்கிறுர்.

சனநாயகம் குரல் கொடுக்கிறது

சேலத்தில் எஃகுத் தொழிற்சாலை வேண்டுமெனக் கோரிக்கை

"சேலத்தில் இரும்பு எஃகுத் தொழிற்சாலை ஏற்படுத்தப்பட வேண்டும்" என்று, மத்திய மாநில அரசுகளை இராசிபுரம் நகரசபை தீர்மானமொன்றின் மூலம் வற்புறுத்தியுள்ளது.

"இதனுல் இம்மாவட்டத்தில் வேலையில்லாத் திண்டாட்டம் பெரிதும் குறையும்" என்றும் எடுத்துக்காட்டப்பட்டுள்ளது.

பம்பாய் அருகில் தாதுப் பொருள்கள்

ஏராளமான அளவில் இருக்கிறதாம்

பம்பாய் மாநிலத்தில் ஏராளமான தாதுப் பொருள்கள் இருப்பதாக பூகர்ப்ப ஆராய்ச்சியாளர்கள் கண்டுபிடித்திருக்கின்றனர் என்று தெரியவருகிறது.

நாகபுரி மாவட்டத்தில் உம்ரேர் என்ற பகுதியில் தங்கம், செப்பு, இரும்பு, குரோமைட் ஆண்டிமனி முதலிய தாதுப் பொருள்கள் கிடைக்கின்றன என்றும், சில இடங்களில் படிந்துள்ள தங்கம், செப்பு ஆகிய தாதுப் பொருள்களை வர்த்தக ரீதியில் பயன்படுத்த முடியும் என்றும் கருதப்படுகிறது.

இந்தக் கனிப் பொருள்கள் பற்றி மேலும் தீவிரமாக ஆராய்ச்சி நடத்துமாறு அரசாங்கம் சிபாரிசு செய்துள்ளதாம்.

களுக்கு சம்பள உயர்வு தந்தால்

பண்டிதருக்குப் புதிய வேலே!

பிணத்தைப் பிழைக்க வைப்பார்?

புதுடில்லி, ஜுன் 12—

இங்கு வந்துள்ள வடகொரிய வர்த்தகத் தூதுக் குழு 'ஜின்சன்' என்னும் ஒரு மருந்துப் புட்டியை பண்டித நேருவுக்கு அன்பளிப்பாகத் தந்துள்ளதாம்.

மரணமடையும் தருவாயில் இருக்கும் ஒரு நபருக்கு, இந்த மருந்தில் ஒரு சில துளிகளே அளித்தால் அவர் குணமடைந்து விடுவாராம்!

திடீர் குறைவுக்குக் காரணம் என்ன?

நிர்வாக போர்டின் திறமைக் குறைவு காரணமல்லவாம்!

பெங்களூர், ஜுன் 13—

1956-ம் ஆண்டு டிசம்பர் திங்களில் கோலார் தங்கச் சுரங்கத்தில் 13,656 அவுன்ஸ் தங்கம் உற்பத்தி செய்யப்பட்டதாம். அடுத்த நான்கு மாதங்களில் உற்பத்தி முறையே 12,954; 14,270; 14,179; 14,330 அவுன்ஸ் தங்கம் என்று மதிப்பிடப்பட்டுள்ளது.

'சுரங்கங்கள் தேசிய மயமாக்கப்பட்டவுடன் உற்பத்தி ஏன் குறைந்துவிட்டது?' என்று மைசூர் சட்டசபையில் கேள்வி ஒன்று கேட்கப்பட்டபோது சுரங்கங்களில் கிடைக்கும் தங்கக் கனிப் பொருளின் தரம் குறைவாக உள்ளது என்றும், மைசூர் சுரங்கத்தில் தங்கம் குறைந்துவிட்டது என்றும், சாம்பியன் ரீப் சுரங்கத்தில் ஏற்பட்ட தீவிபத்தும், சனவரியில் நடைபெற்ற வேலை நிறுத்தமும் (4 நாட்கள்) உற்பத்தியைப் பாதித்துள்ளது என்றும் நான்கு காரணங்களைக்கூறி, தங்க உற்பத்திக் குறைவுக்கு 'நிர்வாக போர்டு' திறமைக் குறைவு காரணம் அல்ல என்றும் மைசூர் முதலமைச்சர் நிஜலிங்கப்பா பதிலளித்துள்ளார்.

ரூ. 2 கோடி 'போனஸ்'

தேயிலைத் தோட்டத் தொழிலாளருக்குதரப்படும்

அசாம் தேயிலைத் தோட்டத் தொழிலாளருக்கு 1955-ம் ஆண்டிற்கான போனசாகவும், அரிசி - வெட்டு நஷ்டஈடாகவும் இம் மாதம் ரூ. 1½ கோடி முதல் ரூ. - 2 கோடி வரை விநியோகிக்கப்படும் என்று தெரியவருகிறது.

ஒரு தொழிலாளிக்கு போனசாக ரூ. 67-ம், நஷ்டஈடாக ரூ. - 39 - ம் கிடைக்குமென்று தெரியவருகிறது.

அரசாங்கம் ஏற்று நடத்தும் பிரச்சினே எழவில்லே?

கல்கத்தா, ஜுன் 12—

"மேற்கு வங்கத்திலுள்ள தேயிலே, சணல் தொழிற்சாலேகள், நிலக்கரி சுரங்கங்களே அரசாங்கம் ஏற்று நடத்தும் பிரச்சினே எழவில்லே" என்று மேற்கு வங்க முதலமைச்சர் டாக்டர் ராய் வெளிப்படையாக அறிவித்துள்ளார்.

சென்னே மாநிலத்தில்

நியாய விலேக் கடைகள்

சென்னே மாநிலம் எங்குமாக, பல மாவட்டங்களிலும் மேலும் சுமார் 208 நியாய விலேக் கடைகளேத் திறக்குமாறு சென்னே சர்க்கார் உத்தரவிட்டிருக்கின்றனராம்.

இவற்றையும் சேர்த்தால் மாநிலத்தில், நியாய விலேக் கடைகளின் எண்ணிக்கை 968 ஆக உயரும் என்று தெரிகிறது.

திருவனந்தபுரம், ஜுன் 12—

வடநாட்டுப் பிரபல தொழிலதிபர் ஜி. டி. பிர்லா, கேரள மாநிலத்தின் தொழில் அபிவிருத்தி சம்பந்தமாக அம்மாநிலத் தொழில் அமைச்சருடன் பேச்சு வார்த்தை நடத்தி வருவதாகத் தெரியவருகிறது.

'ஏற்றத் தாழ்வுகளே அதிகரிக்கச் செய்யும்'

'பாமர மக்களின் இன்னல்கள் பெருகுவதற்கு வழிகோலும்'

புதுவரிகளுக்கு தமிழ் நாடு பி. சோ. கட்சி கண்டனம்

கோவை, ஜுன் 12—

"புதிய வரிகள் சோஷலிச சமுதாயத்திற்கு வழிகாட்டுவதற்கு மாறாக சமூகத்தில் உள்ள ஏற்றத் தாழ்வுகளே அதிகரிக்கும்; முதலாளித்துவத்தைப் பலப்படுத்தும்; பாமர மக்களுக்குத் தாங்கமுடியாத தொல்லேகளேத் தரும்" என்று, புதிய வரிகளேக் கண்டித்துப் பழனியில் நடைபெற்ற தமிழ்நாடு சோஷலிஸ்டுக் கட்சியின் நிர்வாகக் குழு தீர்மானம் நிறைவேற்றியுள்ளது.

மிருகத்தனமான செய்கை!

"சோஷலிசத்தை அடிப்படையாகக் கொண்ட அரசாங்கம் அபிவிருத்தித் திட்டங்களே நிறைவேற்றுவதற்காகப் பாமர மக்களின் வரிச்சுமையை அதிகரிப்பது மிருகத்தனமானது" என்றும் கண்டனத் தீர்மானத்தில் கூறப்பட்டுள்ளது.

சிறு உற்பத்தியாளருக்கு சலுகைகள் தரப்படுமாம்

தீப்பெட்டி மீது வரி குறையும்

புதுடில்லி, ஜுன் 12—

தீக்குச்சி உற்பத்தித் தொழிலில் சிறு உற்பத்தியாளர்களுக்கு ஊக்கமளிக்கும் வகையில் இந்திய அரசாங்கம் 'எக்சைஸ்' வரிகளேக் குறைத்துள்ளது; இந்தச் சலுகை 12—6—57 முதல் அமுலாகுமாம்.

நாள் ஒன்றுக்கு உற்பத்தி செய்யப்படும் தீப்பெட்டிகளேக் கணக்கிட்டு சலுகைகள் தரப்படுகின்றனவாம்.

சிறு தொழில் வளர்ச்சி

டில்லி தரும் உதவி

புதுடில்லி, ஜுன் 12—

அசாம், பீகார், ஒரிசா மற்றும் ஆந்திர மாநிலங்களுக்குச் சிறு கைத்தொழில் அபிவிருத்திக்காக டில்லி சர்க்கார் ரூ. 13 இலட்சம் வரை மானியமாக வழங்கியிருக்கின்றனர் என்று தெரியவருகிறது.

மக்கள் சபைக் கூட்டம்

புதுடில்லி, ஜுலே 12—

மக்கள் சபையின் அடுத்த கூட்டம் வரும் ஜுலே 15-ந் தேதி துவங்கும் என்றும், செப்டம்பர் 16-ந் தேதி முடிவுறும் என்றும் அறிவிக்கப்பட்டிருக்கிறது.

இந்தக் கூட்டத்தில், பொது, மற்றும் இரயில்வே வரவு-செலவு திட்டங்கள் பரிசீலிக்கப்படும் என்றும், நிதி மசோதா, சொத்து, செலவு வரி மசோதாக்கள் விவாதிக்கப்படும் என்றும் தெரிகிறது.

மாநிலங்கள்சபை, ஆகஸ்டு திங்கள் 12-ந் தேதிதான் கூடும் என்றும் தெரிகிறது.

நில நடுக்கத்தால் கோயில்கள் நாசம்!

மணிலா, ஜுன் 12—

பிலிப்பைன்சிலுள்ள தீவு ஒன்றின் மத்தியப் பகுதியில் நில நடுக்கம் ஏற்பட்டதின் விளேவாக மாதா கோயில்கள், வீடுகள், அரசாங்கக் கட்டிடங்களுக்கு பெருத்த சேதம் ஏற்பட்டுள்ளதாகச் செய்திகள் கூறுகின்றன.

இனவெறி வலுக்கிறது!

'நர்ஸ்' தொழிலிலும் ஊடுருவல்

கேப்டவுன், ஜுன் 12—

நர்ஸ் தொழிலில்கூட வெள்ளேயர்—கருப்பர் என்ற இன ஒதுக்கல் ஏற்பாட்டைப் புகுத்த தென் ஆப்பிரிக்க அரசாங்கம் ஒரு சட்டத்தை கொண்டுவந்துள்ளதாம்.

சென்னே மாநிலத்தில் மண் அரிப்பு!

சென்னே, ஜுன் 12—

சென்னே மாநிலத்தில் ஏற்பட்டுள்ள மண் அரிப்புகள் பற்றி அக்கரை செலுத்த வேண்டும் என்று திட்டக் குழு சுட்டிக்காட்டி சென்னே அரசாங்கத்தை விழிப்புணர்வு பெறச் செய்த பின்னர், சென்னே அரசாங்கம் அதுபற்றி சில நடவடிக்கைகளே மேற்கொண்டிருக்கிறது.

மண் அரிப்பால் பாதிக்கப்பட்ட இடங்களில் காடுகள் ஏற்படுத்தவும், நல்ல மேய்ச்சல் நிலங்களே உருவாக்கவும் திட்டக்குழு கூறியபடி சென்னே அரசாங்கம் செயல்படும் என்று தெரிய வருகிறது.

மாநிலம் முழுவதும் 'துப்புரவு' நடத்த ஏற்பாடாகியுள்ளது. இதற்கான வேலேகள் செங்கற்பட்டு, தென்னுற்காடு, வடஆற்காடு, சேலம் ஆகிய மாவட்டங்களில் மேற்கொள்ளப்படுமாம்.

கடலோரக் கப்பல் போக்குவரத்து

டில்லியிடம் கேரள சர்க்கார் வேண்டுகோள்

திருவனந்தபுரம், ஜுன் 12—

கடலோரக் கப்பல் போக்குவரத்தினேத் துவங்குமாறு கேரள சர்க்கார் மத்திய சர்க்காரைக் கேட்டிருப்பதாகத் தெரிகிறது.

"கடலோரக் கப்பல் போக்குவரத்து மாநாட்டினே, தங்கள் கப்பல்களேக் கேரள கடற்கரையில் உள்ள சிறு துறைமுகங்களில் ஏற்றுமதி—இறக்குமதிக்காகப் பயன்படுத்துமாறு டில்லி சர்க்கார் கேட்கவேண்டும் என்று இந்த மாநில சர்க்கார் திரும்பத் திரும்ப எடுத்துரைத்து வருகின்றனர்" என்று, பொதுமராமத்து இலாகா மந்திரி மஜீத், கேரள சட்டசபையில் கேள்வி ஒன்றுக்குப் பதிலளிக்கையில் கூறியிருக்கிறர்.

3,000 போக்குவரத்து ஊழியர்களுக்குச் சலுகை

திருவனந்தபுரம், ஜுன் 13—

கேரள மாநிலத்தின் போக்குவரத்து இலாகாவில் பணியாற்றும் சுமார் 3,000 ஊழியர்களுக்கு பல சலுகைகள் கிடைத்துள்ளன.

பொதுவாக ஊழியர்களின் ஊதியம் உயர்த்தப்பட்டிருக்கிறது; கடைநிலேஊழியருக்குகூட ரூ. 30 முதல் ரூ. 50 வரை மாதச் சம்பளமாக நிர்ணயிக்கப்பட்டுள்ளது.

'பென்ஷன்' வசதியில்லாத ஊழியர்களுக்கு, இறுதியில், ஆண்டுக்கு ஒரு மாதம் என்ற அடிப்படையில் கணக்கிட்டுவரும் மொத்த தொகை 'கிராசுட்டி' யாகத் தரப்படுமாம்.

அன்றாடம் கூலி பெறுவோரின் வேலே நிலேயை உறுதிப்படுத்தியுள்ளனர்.

1954-ல் நடைபெற்ற வேலே நிறுத்தத்தில் பங்கு கொண்டவர்கள், அந்தக் காலத்தில் 'விசேட ஓய்வு' பெற்றவர்களாகக் கருதப்படுவர்.

கழகக் கூட்டங்கள்

★

கோபி:

பெரியார் திடலில்
16—6—57 இரவு 7 மணிக்கு
தலேவர்: க. பெ. துரை
பேசுவோர்:
சிற்றுளி-சுப்பிரமணியம்
கோவை-செழியன்

★

திருச்சி:

டவுன் ஹால் திடல்
16—6—57 மாலே 6 மணிக்கு
தலேவர்:
மு. பெ. முத்துக்கருப்பன்
பேசுபவர்: கி. மனோகரன்

★

அபிவிருத்தீஸ்வரம்:

(நன்னிலம் வட்டம்)
வெட்டாற்றுத் திடலில்
16—6—57 மாலே 6 மணிக்கு
தலேவர்: டி. கோவிந்தராசு
பேசுவோர்:
சி. பி. சிற்றரசு
எஸ். எம். வைத்திலிங்கம்
டி. எம். தாஜுதீன்
அ. ச. நடராசன்

★

நன்னிலம்:

15—6—57 மாலே 6 மணிக்கு
தி. மு. கழகத் துவக்க விழா
தலேவர்:
கோ. பாலசுப்பிரமணியம்
பேசுவோர்:
ஏ.வி.பி. ஆசைத்தம்பி எம்.எல்.ஏ.
சி. ஜம்பு

★

பெரியகொல்லப்பட்டி:

(இராமநாதபுரம் மாவட்டம்)
நெடுஞ்செழியனுர் திடலில்
16—6—57 இரவு 7 மணிக்கு
தி. மு. கழகத் திறப்புவிழா
தலேவர்: வி. எம். சுப்பையா
பேசுவோர்:
எம். எஸ். இராமசாமி
எம். நடராசன்
இரா. சந்திரன்
இளஞ்சேரன்
வி. கே. சாமி
இரா. இராமச்சந்திரன்
(விழாவில், மராட்டிய மாவீரன் 'வீர சிவாஜி' ஓரங்க நாடகமும் நடைபெறும்.

சொற்பயிற்சிக் கூட்டம்

16—6—57 மாலே 7 மணிக்கு சென்னே—புதுவண்ணே வள்ளுவர் இளேஞர் மன்றத்தில் தோழர் எஸ். சுப்பிரமணி தலேமையில் சொற்பயிற்சிக் கூட்டம் நடைபெறும்; தோழர்கள் பலர் 'ஒழுக்கம்' எனும் பொருளேப் பற்றி பேசுவர்.

பீரங்கிப் போரில்

இரு போர்க் கப்பல்கள் சேதம்

தைபே, ஜுன் 12—

நேற்று இரவு கம்யூனிஸ்டு சீனுவைச் சேர்ந்த இரண்டு போர்க் கப்பல்களுக்கும், கோமிண்டாங் சீனக் கப்பல்களுக்கும் ஏற்பட்ட பீரங்கிப் போரில், கம்யூனிஸ்டு சீனக் கப்பல்கள் பலத்த சேதமடைந்ததாக கோமிண்டாங் சீன அரசாங்கம் அறிவித்துள்ளது.

புதுவையில்

கழக எம். எல். ஏ.-க்களுக்குப் பாராட்டு

16—6—57 மாலே 6-மணிக்கு புதுவை செஞ்சிச் சாலேத் திடலில் தோழர் ச. சிவப்பிரகாசம் தலேமையில், வெற்றி பெற்ற சட்டமன்ற உறுப்பினர்களான **அண்ணு** அவர்களேயும், மற்றும் தோழர்கள் க. அன்பழகன், ஏ. கோவிந்தசாமி, ப. உ. சண்முகம், எம். செல்வராசு, எம். ஆனந்தன், சி. நடராசன் தோழியர் சத்தியவாணிமுத்து ஆகியோரைப் பாராட்டி ஓர் பொதுக்கூட்டம் நடைபெறும்; பாராட்டு பெறும் அனேவரும் நன்றியுரையாற்றுவார்கள்.

மணலர் எஸ்டேட் திராவிடத் தொழிலாளர் முன்னேற்றக் கழகப் பொதுக்கூட்டம்

16—6—57 காலே 11 மணியளவில், மேற்படி பொதுக்கூட்டம் தோழர் தங்கராஜ் தலேமையில் நடைபெறும்; தோழர்கள் மு. வசனப்பித்தன், எஸ். ஜோசப் ஆகியோர் சொற்பொழிவாற்றுவார்கள்.

சென்னே - இராயபுரம் திராவிட நற்பணி மன்றத் திறப்பு விழா

16—6—57 காலே 9 மணிக்கு, மேற்படி மன்றத் திறப்பு விழா தோழர் எம். ஏ. புகழேந்தி தலேமையில் நடைபெறும்; தோழர் என். சீவரத்தினம் மன்றத்தைத் திறந்துவைப்பார்; தோழர் மதிவாணன் கொடியேற்றுவார்; தோழர்கள் எஸ். பி. டி. திராவிடமணி, வி. டி. அரசு ஆகியோர் பேசுவர்.

திருச்சி 13-வது வட்ட தி. மு. க. அமைப்புக் கூட்டம்

16—6—57 காலே 11 மணிக்கு மேற்படி கூட்டம் என். எஸ். பங்களாவில் நடைபெறும்; அதுபோது வட்ட உறுப்பினர்கள் அனேவரும் வருகைதர வேண்டப்படுகிறர்கள்.

மணவழகர் மன்றம்

15—6—57 மாலே 6½ மணிக்கு மேற்படி மன்ற நிலேயத்தில் (நெ. 2. முருகேச முதலி தெரு சிவஞானம் பூங்கா அருகில்) ஒரு பொதுக்கூட்டம் புலவர் முருக சிவன் அவர்கள் தலேமையில் நடைபெறும்; அதுபோது தோழர் முத்தெழிலன் 'உடலும் உணவும்' என்பது பற்றிப் பேசுவார்.

நாஞ்சில் கி. மனோகரன்

சுற்றுப்பயணம்

ஜுன்
16: திருச்சி—காலே—திருமணம்
மாலே — பொதுக் கூட்டம்
17: பேட்டவாய்த்தலே
18: சீரங்கம்
19: சுப்பிரமணியபுரம்
20: ரெஞர்
21, 22, 23, 24: பெங்களூர் பகுதி

மு. கருணாநிதி

சுற்றுப்பயணம்

ஜுன்
16: சென்னே
18: அத்திப்புலியூர்
19: திருவாரூர்
20: செட்டிக்குளம்
21: காலே—குளித்தலே
மாலே—ஆலம்பாக்கம்
23: சேலம்

★★★★★★★★★★★★★★★★★★★★★★★★★★★★★

வண்ணேத் தொகுதி தேர்தல் வழக்கு நிதிக் கூட்டம்

15—6—57 மாலே 6-மணிக்கு
சென்னே கோகலே மண்டபத்தில்

இரா. செழியன் M. A.

அவர்கள் தலேமையில்

அண்ணு

அவர்கள் பேசுவார்

★

நன்கொடை: ரூ. 1; அணு 8

—தி. மு. க. 4-வது வட்டக் கிளே, சென்னே

★★★★★★★★★★★★★★★★★★★★★★★★★★★★★

திராவிட முன்னேற்றக் கழகத்துக்காக தோழர் இரா. நெடுஞ்செழியன் எம்.ஏ., அவர்களால் அழகிரி அச்சகத்தில் அச்சிடப் பெற்று, (24. சூரியநாராயண செட்டித் தெரு, இராயபுரம், சென்னே) வெளியிடப்பெறுகிறது. ஆசிரியர்: இரா. நெடுஞ்செழியன் எம்.ஏ.